# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தேசிய சுற்றுச்சூழல் மன்றம் (கூட்டிணைத்தல்)

**தேசிய சுற்றுச்சூழல் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அசல ஜாகொடகே அவர்களால் 2013, திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, திசெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 278 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 5.00**

# தேசிய சுற்றுச்சூழல் மன்றம் (கூட்டிணைத்தல்)

## தேசிய சுற்றுச் சூழல் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"தேசிய சுற்றுச் சூழல் மன்றம்" என அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும் மன்றத்தின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சட்டவிதிகளுக்கு அமைவாக மன்றத்தின் நோக்கங்களை மற்றும் மன்றத்தை நடாத்துவதற்கான தொடர்புடைய சகல விடயங்களையும் அதற்கேற்ப நடைமுறைப்படுத்த மற்றும் நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்டதாலும் :

இங்கு மன்றம் அமைக்கப்பட்டது ஏதேனுமொனரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்காகவே ஆகும். அவ்விடயத்தை இவ்வளவு காலமும் சிறப்பாக நடைமுறைப்படுத்தியும் மற்றும் நிறைவேற்றியும் உள்ளது. மன்றத்தை கூட்டிணைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இக் கோரிக்கையை நிறைவேற்றுவது பொதுமக்களின் எதிர்காலத்துக்கான ஒரு படியாகும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தேசிய சற்றுச்சூழல் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*தேசிய சுற்றுச் சூழல் மன்றத்தைக் கூட்டிணைத்தல்*

**2.** இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்தும் மற்றும் அதற்கு பின்பு (இது ஒரு மன்றமாக குறிப்பிடப்படுகின்றது) தற்பொழுது தேசிய சுற்றுச்சூழல் மன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கும் நபர்கள் மற்றும் இங்கு உருவாக்கப்படும் அமைப்புக்களில் உறுப்பினர்களாக இணைந்துகொள்ளும் நபர்கள் (அமைப்புக்கள் என குறிப்பிடப்படும்) தேசிய சுற்றுச் சூழல் மன்றம் என்ற பெயர் மற்றும் வடிவம் சிறந்த செயற்பாடுகளுடன் அமைவதுடன் அவ் அமைப்பினால் அப்பெயரைக் கொண்டு வழக்குத் தொடர முடியும். மேலும், பொது இலச்சினை ஒன்றை பயன்படுத்த, அதனை மாற்றியமைக்க அதிகாரமுடையதாகும்.

**3.** மன்றத்தை நிறுவுவதற்கு காரணமாக அமைந்த பொது நோக்கங்கள் கீழ்க் குறிப்பிடப்படுகின்றன :- பொதுவான நோக்கங்கள்.

(அ) மீளாய்வின்போது பெற்றுக்கொண்ட பெறுபேறுகளை காலத்துக்குக்காலம் பிரசுரித்தல், ஆலோசனை வழங்கல் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்கு உதவுதல் ;

(ஆ) உள்நாட்டு உணவு வகைகளை ஊக்குவித்தல் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் மாற்றுச்சக்தி பயன்பாட்டை பிரபல்யப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் மேலும் குறைந்த செலவிலான சுற்றாடல் பாதுகாப்பு தொழில்நுட்பத்தை மாற்றியமைத்தல் மற்றும் இலகுபடுத்தல் ;

(இ) இலங்கையின் இயற்கையான உயிரியல் மற்றும் உயிரியல் அல்லாத வளங்களை பாதுகாத்தல், உள்நாட்டு அறிவை ஊக்குவித்தல் மற்றும் கலாசார, பரம்பரை சொத்துக்களை பாதுகாத்தல் ;

(ஈ) இளம் சந்ததியினரை இணைந்து பொதுமக்கள் இடையே சுற்றாடல் பிணைப்பை ஏற்படுத்தல் மற்றும் சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள் அவற்றிற்குத் தீர்வு தொடர்பான கல்வியைப் பெற்றுக்கொடுத்தல், மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான தெளிவை பெற்றுக்கொடுத்தல், இலங்கையினுள் கண்டுபிடிக்கப்படும் சூழல் பிரச்சினைகளுக்கு பொதுமக்களை முன்னுரிமைப்படுத்தி செயற்பாடுகளை முன்னெடுத்தல் ;

(உ) சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்றிட்டங்கள் தொடர்பாக தகவல்களை திரட்டுதல், மீளாய்வு செய்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் ;

(ஊ) தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் செயற்றிட்டங்கள், நிகழ்வுகளுக்கான தேவைப்பாடுகளை இனங்காணல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒத்துழைப்பு தேவைப்படும் மாகாணங்களை இனங்காணல், பயிற்சி அளித்தல், மீளாய்வு மற்றும் செயற்படுத்தல், நிகழ்வுகளை நடைமுறைப்படுத்தல் ;

(எ) மாகாணங்களில் காணப்படும் சுற்றாடல் தொண்டர் குழு, சுற்றாடல் கூட்டுறவு இணைப்புக்களை உருவாக்கு வதற்கு உதவுதல், தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குதல், அமைப்புகளுக்கிடையிலான முகாமைத்து வம் மற்றும் நடவடிக்கைகளின்போது செயற்திறனை உயர்த்துதல் ;

(ஏ) மாகாணங்களுக்கு இடையில் கூட்டுறவு அமைப்புகளுக் கிடையிலான தகவல்களை முறையாக பகிர்நதளித்தல் மற்றும் அனுபவங்களை பரிமாறிக்கொள்ளுதல், மாகாண கூட்டுறவு அமைப்புகளுக்கிடையில் முன்னேற் றத்தை ஏற்படுத்த மேடையாக செயற்படுதல் ;

(ஐ) சுற்றாடல் அபிவிருத்திக்காக உரிய அமைப்புக்களுடன் சிறந்த தொடர்பினை ஏற்படுதிக்கொள்ளல் ;

(ஒ) உறுப்பினர்களுக்கிடையில் பங்குகொள்ளல் நடை முறையை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தல், தேசிய சுற்றாடல் மன்றத்தை நிறுவுவதற்கு அடிப்படையாக இருந்த பேராதனைப் பல்கலைக்கழக ஹந்தானை பாதுகாப்பு அமைப்புக்குத் தேவையான உதவிகளை வழங்குதல் ;

(ஓ) நிறைவேற்றுக்குழுவின் நோக்கம் மற்றும் வேறு இலக்கை முன்னேற்றுவதில் தாக்கம் செலுத்தும் ஏனைய உகந்த செயற்பாடுகளை முன்னெடுத்தல் ;

கூட்டுத்தாபனத்தின் பொதுவான அதிகாரங்கள்.

**4.** இச்சட்டமூலத்தின் விதிகள் மற்றும் வேறு எவரேனும் எழுதிய விதிகளுக்கமைவாக கீழ் குறிப்பிடப்படும் அதிகாரங்கள் மன்றத்திற்கு இருக்கலாம் :-

(அ) நன்கொடைகளை பெற்றுக்கொள்ளல், சேகரித்தல் பொருட்களாகவோ, பணமாகவோ, தொழில்நுட்ப உதவிகளாகவோ இருக்கலாம் ;

(ஆ) அசையும், அசையா சொத்துக்களை பெறுவதற்கு, சொந்தமாக்குவதற்கு, குத்தகைக்கு அல்லது வாடகைக்கு கொடுப்பதற்கு, பெறுவதற்கு, விற்பனை செய்வதற்கு, உரிமைகோருவதற்கு மற்றும் மன்றத்தின் நடவடிக்கைக் காக தேவைப்படும் அல்லது வசதியான கட்டடங்கள் அல்லது நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தல் ;

(இ) வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்தல், நடாத்திச் செல்லுதல் மற்றும் கணக்கை மூடுதல் மற்றும் பிணைகள் இன்றி கடன் எடுத்தல் அல்லது பெற்றுக் கொள்ளல் ;

(ஈ) மன்றத்தின் பணிகளுக்காக உடனடியாக தேவையற்ற பணம், 5 ஆம் வாசகத்தில் கூறப்பட்டவாறு தெரிவு செய்த நிறைவேற்றுக் குழுவினால் சிறந்த முதலீட்டில் ஈடுபடுத்தப்படலாம் ;

(உ) சில நபர்களுடன் அல்லது சட்டபூர்வ அமைப்புக் களுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்தல் ;

(ஊ) மன்றத்தின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை நியமித்தல் சேவையிலிருந்து வெளியேற்றல், இடை நிறுத்தல் மற்றும் மன்றத்தினால் தீர்மானிக்கப்படும் வேதனம், கொடுப்பனவு, பணிக்கொடைகளை வழங்குதல் ;

(எ) மன்றத்தின் இலக்கு நோக்கங்களை முன்னேற்று வதற்கான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக அல்லது உகந்தமுறையில் முன்னெடுக்க மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

மன்றத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) மன்றத்தின் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல், நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், மன்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் சட்ட விதிமுறைகளை ஒழுங்கமைக்கப்பட்டுள்ள அடிப்படையில் மற்றும் அச்சட்டதிட்டங்களுக்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளின் மற்றும் ஏனைய நபர்களை உள்ளடக்கிய (குழு என குறிப்பிடப்படும்) செயற்குழுவிற்கு இச் சட்டமூலத்தின் சட்டதிட்டங்களுக்கு மற்றும் மன்றத்தை கட்டுப் படுத்தும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

(2) சட்டமூலம் நடைமுறைக்கு வருவதற்கு உரிய திகதிக்கு முந்திய தினம் மன்றத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாக அங்கம் வகித்த உறுப்பினர்கள் மன்றத்தின் முதல் நிர்வாக குழுவுடன் தொடர்புடைய நிர்வாகிகள் ஆவர்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் பொது மற்றும் வருடாந்த கூட்டத்தின்போது அதற்கு சமுகம்தரும் வாக்குரிமை உடைய உறுப்பினர்களின் பெரும்பான்மையின் அடிப்படையில் இச்சட்டத்தில் அல்லது ஏதேனும் சட்டமூலங்களுக்கு அமைய சட்டவிதிகளை உருவாக்க உள்ளடக்க முடியும். கீழ்குறிப்பிடப்படும் சகல காரணங்களும் காலத்துக்குக்காலம் சட்டரீதியாக உருவாக்கிக்கொள்ள முடியும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(அ) உறுப்பினர்களை வகைப்படுத்தல் வகைகளுக்கமைய அவர்களின் உறுப்புரிமை கட்டணம் அவர்களை இணைத்துக்கொள்ளல் அவர்களை விலக்குதல் அல்லது மீள இணைத்தல் அல்லது சுயவிருப்பத்தில் விலகுதல் ;

(ஆ) சபையை தெரிவுசெய்தல், சபையின் அதிகாரிகள் சுயவிருப்பத்தில் விலகுதல், அவர்களை பதவியிலிருந்து விலக்குதல் அல்லது பதவியை கைவிடுதல் மற்றும் சபையின் கட்டுப்பாடுகள், நடவடிக்கைகள் மற்றும் மன்றம் செயற்படவேண்டிய முறைகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் வெவ்வேறு அதிகாரிகள், முகவர்கள் மற்றும் ஊழியர்களின் அதிகாரங்கள், அவர்களின் கடமைகள், அனுமதிகள், விலக்குதல், இடைநிறுத்துதல், சேவையை முடிவுக்கு கொண்டுவருதல் ;

(ஈ) மன்றத்தின் அல்லது ஏதேனும் உப அமைப்புக்களின் கூட்டங்கள் தொடர்பாக தேவையான முறைமைகள் அக்கூட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டிய வழிமுறைகள் உள்ளடங்களாகவும் கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தல், ஒழுங்கு செய்தல், நடாத்துதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் மற்றும் குழுவின் உறுப்புரிமை தொடர்பான தகுதிகள், தகுதியற்றமை தொடர்பாக ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் ;

(எ) மன்றத்தின் நடவடிக்கைகளை பொதுவாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் நோக்கம், இலக்கு என்பவற்றை அடைந்துகொள்ளல்.

(2) இச்சட்டமூலம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னைய திகதியில் தாக்கம் செலுத்திய மன்றத்தின் யாப்பு அல்லது வேறு எவரேனும் எழுதிய சட்டவிதிகளுக்கமைய மன்றத்தின் சட்டமாக குறிப்பிடப்படுவதுடன், அவ்விதிமுறைகள் இவ்வத்தியாயத்துக் கமைய சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அது சட்ட விதிகளை அமைப்பதுபோன்று கூட்டமொன்றில் அதே படிமுறை யில் உருவாக்கல், மாற்றம் செய்தல், இணைத்தல் அல்லது பரிசீலனை செய்தல் செயற்படுத்தப்பட வேண்டும்.

(3) மன்றத்தின் உறுப்பினர்கள் மன்றத்தின் சட்டவிதிகளுக்கு உட்பட வேண்டும்.

*மன்றத்தினால் மற்றும் மன்றத்திற்கு கொடுக்க வேண்டிய கடன்.*

**7**. சட்டமூலம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னைய திகதியில் மன்றத்தில் இருக்கும் சகல கடன் மற்றும் பொறுப்புக் கள் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தி நிறைவுசெய்ய வேண்டியதுடன் அத்தினத்தில் மன்றம் பெற்றுக்கொள்ளும் சகல கடன், நன்கொடைகள் மற்றும் நிதிகள் இச்சட்டத்தின் காரணங்களுக்கமைய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டும்

*மன்றத்தினால் அசையும் அல்லது அசையா சொத்துக்களை வைத்துக் கொள்ளல்.*

**8**. இச்சட்டத்திற்கு அமைவாக மன்றத்தினால் பெற்றுக் கொண்ட அல்லது நிர்வகிக்கும் அனைத்து அசையும், அசையா சொத்துக்கள் மற்றும் மன்றத்திற்கு வழங்கப்படும் அல்லது மன்றத்திற்கு கிடைக்கும் அனைத்து நிதியும் மன்றத்தின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக சட்டதிட்டங்களுக்கு அமைவாக பயன்படுத்துதல், முதலீடு செய்தல் வேண்டும். சட்டதிட்டங்களுக்கு அமைவாக அச்சொத்துக்களை விற்றல், அடகுவைத்தல், குத்தகைக்குவிடுதல், கைமாற்றுதல் அல்லது வேறுமுறைகளில் சொந்தமாக்குதலுக்கு பூரண அதிகாரம் உண்டு.

*கணக்குகள் மற்றும் கணக்காய்வு.*

**9**. (அ) மன்றத்தின் ஆண்டாக பஞ்சாங்க வருடம் கருதப்படும் ;

(ஆ) மன்றத்தினால் மன்றத்தின் வருமானம் மற்றும் செலவீனங்கள், சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து கொடுக்கல்வாங்களும் சரியான முறையில் ஏடுகளில் பதியப்பட்டு பேணப்பட வேண்டும்;

(இ) மன்றத்தின் கணக்கு, நிறைவேற்றுக் குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட தகுதி உடைய கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் ;

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10**. தலைவர், செயலாளரின் அல்லது நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கப்படும் மன்றத்தின் வேறு இரண்டு உறுப்பினர்கள் முன்னிலையில் தவிர்ந்த வேறு எவரேனும் தயாரிக்கும் பத்திரங்களில் மன்றத்தின் இலச்சினையை பதிப்பது தவிர்க்கப்பட வேண்டும்

*உறுப்பினர்களின் பொறுப்புக்களின் வரையறை.*

**11**. மன்றத்தின் எந்தவொரு உறுப்பினரிடமும் மன்றத்துக்கான வருடாந்த உறுப்புரிமை கட்டணத்தை விட மேலதிக தொகையை மன்றத்தின் கடன் அல்லது பொறுப்புக்களை தீர்ப்பதற்காக அல்லது வேறு தேவைகளுக்காக அறவிடலாகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12**. குடியரசினதோ, ஒரு அரச கூட்டுத்தாபனத்திலோ, சபையிலோ வேறு ஒரு நபரின் உரிமைக்கு இந்த சட்டம் ஒரு இடைஞ்சலாகவோ, கட்டுப்பாடாகவோ அமையக் கூடாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையியே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்